

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் ஆவுடையார் பட்டுஊராட்சியில் பொதுமக்களிடம் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வாக்குச் சேகரித்தார், உடன் புதுவை மாநில அமைப்பாளர், புதுவை மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், கண்டமங்கலம் ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ரவிதுரை, வானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பி.கே.டி.முரளி மற்றும் கடலூர் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் இருந்தனர்.


திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்



**முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வு 100 ஜீன் 2023 முதல் மே 2024 வரை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டு, ஜீன்2024 முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் 10 . நடைபெறும் என தீர்மானித்துமுரசொலியில் அறிவிக்கப்பட்டது அதில் ஐந்து நிகழ்ச்சிகள் நடத்தி முடிக்கப்பட்டது மீதமுள்ள ஐந்து நிகழ்ச்சிகள் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிந்தவுடன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறும்!**

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 9/7/24 9 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க்கை வரலாற்று தொகுப்புகளை ரீல்ஸ் தயாரித்து வெளியிடுதல் கலைஞர் 100 FB/ YOUTUBE / TWITTER தொடங்குதல்மற்றும் 100 இளைஞர்களுக்கு வலைதள வசதியுடன் கூடிய கைப்பேசி வழங்கும் நிகழ்வு | மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி | முத்தமிழ் கருணாநிதி மாவட்ட அமைப்பாளர் | **டி.ஆர்.பி.ராஜா** தொழில்துறை அமைச்சர் மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் சிறப்பு அழைப்பாளர் **திண்டுக்கல் ஐ.லியோனி** கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் |
| 2. 10/7/24 5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெரு முனை பிரச்சாரம் | வார்டு எண் – 13,13A மலைக்கோட்டை பகுதி கழகம் | P.சங்கர், S.சரவண செல்வன், வட்ட கழக செயலாளர்கள் | **தமிழன் பிரசன்னா** (கழக செய்தி தொடர்பு இணை செயலாளர்) |
| 3. 14/7/24 5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பட்டிமன்றம் | பொதுக்குழு உறுப்பினர்கள் | எஸ்.பன்னீர் செல்வன், கே.சண்முகம், வி.தனசேகர், கே.கே.கே. கார்த்தி, உ.ராஜேஸ்வரன், ஆர்.மணி மேகலை | பட்டிமன்றத்தை துவக்கி வைப்பவர் **தங்கம் தென்னரசு,** நிதித்துறை அமைச்சர் விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கலைமாமணி சொல்வேந்தர் **சுகிசிவம்** (பட்டிமன்ற நடுவர்) மற்றும் குழுவினர் தலைப்பு கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம்எழுதுகோலே! "செந்தமிழ்செல்வி" திருமதி சாந்தாமணி "சிந்தனை செல்வர்" சிவசக்தி வடிவேல் "சொல்லரசி" பேராசிரியர் பர்வின் சுல்தானா செங்கோலே! "கவிஞர்" மதுக்கூர் ராமலிங்கம் "முனைவர்" திருமதி. எழிலரசி "நகைச்சுவை நயாகரா" செ.மோகன சுந்தரம் |
| 4. 20/7/24 9 AM | மாணவர் களிடேயே வினாடி, வினா போட்டிகள் மற்றும் "தேதி சொல்லும் சேதி" வரலாற்று குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு | மாநகர மாவட்ட பிரதிநிதிகள் | பா. விஜயபாலன், பி.ஜான் செல்லதுரை, கே.என்.நலங்கிள்ளி, கே.முகேஷ் குமார், என்.மோகன், பி.மணிகண்டன், ஆர்.அருண் சன்னாசி, கே.ஏ.ராஜேஷ், வ.கண்ணதாசன், பி.கோபிநாத், | புத்தகம் வெளியிடுபவர் **ஆ.ராசாஎம்.பி.,** கழக துணை பொது செயலாளர், புத்தகம் பெற்றுகொள்பவர் **பி.கே.சேகர்பாபு** இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாணவ–மாணவியருக்கு பரிசு வழங்குபவர் **பூச்சி முருகன்** தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் |
| 5. 21/7/24 5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பாடும் "அரசியலில் கலைஞர்" என்ற தலைப்பில் கூட்டணி கட்சி சொற்பொழிவாளர் கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கம் | திருச்சி மாநகர கழகம் (கிழக்கு) | மு.மதிவாணன், மாநகர கழக செயலாளர் | கருத்தரங்கத்தை துவக்கி வைப்பவர் **கவிஞர் வைரமுத்து** கருத்தரங்க பங்கேற்பாளர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன் (தி.மு.க), பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்), தோழர் மகேந்திரன் (கம்யூனிஸ்ட்), மா.செ.சிந்தனை செல்வன் (வி.சி.க). செந்தில் அதிபன் (ம.தி.மு.க), ப.அப்துல் சமது (ம.ம.க) |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர் -
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


## சிங்கத்துக்கு புத்தி புகட்டிய கொசு கதை!

# கீழ்ப்பெண்ணாத்தூர் மருத்துவமனையை தரம் உயர்த்திடவேண்டும்!

## சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை !

**சென்னை, ஜூலை 3- சட்டப்பேரவையில் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசுகையில் கீழ்ப்பெண்ணாத்தூர் மருத்துவமனையை தாலுக்கா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**



பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசியதாவது:-

சிறப்புமிகு இந்தப் பேரவையில் 12.2.2024 அன்று வைக்கப்பட்ட 2024-2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாக, இன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஓய்வறியா சூரியன் கலைஞர் அவர்களின் உழைப்பு, உழைப்பு என உழைப்பினை உயிர் மூச்சாகக் கொண்டு, தளபதி வழிநின்று, நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலிலே இரவென்றும், பகலென்றும் பாராமல் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 நாடாளுமன்ற தொகுதியிலே அயராது பிரச்சார களம் கண்டு, 40க்கு 40 என்ற வெற்றிக் கனியினை முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில், அவரது பிறந்த நாளில் காணிக்கையாக்கியுள்ள இளைஞர்களின் இளைய சூரியனாக, எழுச்சி நாயகனாக விளங்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சர்; மாவட்ட கழகச் செயலாளர்; பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என்ற மிகப் பெரிய வெற்றியை நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் பெற்றுத் தந்து, தலைவர் கலைஞர் அவர்களுக்குக் காணிக்கையாக்கியிருக்கிறார்கள். நம்முடைய இந்தியா கூட்டாணியை தளபதி அவர்கள் அமைத்து, 'இந்தியா கூட்டணி' என்று பெயர் வைத்தபோது, மோடி அவர்கள் 'இண்டி கூட்டணி' என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு 'NDA கூட்டணி' என்பது 'end ஆ கூட்டணி' என்கிற வகையிலேதான் இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த தேர்தல் பிரச்சாரத்தில் எங்களுடைய ஆட்சிக்கு விரோதமாகவும், மைனாரிட்டி மக்களுக்கு விரோதமாகவும் பல்வேறு கருத்துகளை பிரதமர் அவர்கள் பேசினார். மைனாரிட்டி மக்களுக்கு விரோதமாகப் பேசிய அவர்களுக்கு இன்றைக்கு 'மைனாரிட்டி ஆட்சி'தான் அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த வெற்றி என்பது இந்தியாவிலேயே INDIA கூட்டணியை உருவாக்கிஇன்றைக்கு 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பிரதமர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு அவர் கூட்டணி கட்சியின் ஆதரவிலேதான் ஒரு மைனாரிட்டி அரசாங்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த மாபெரும் வெற்றிக்கு வழிகோலிய நம்முடைய தளபதி அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மருத்துவக் கல்லூரிகள் அதிகம்**

அதேபோல இன்றைக்கு, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மருத்துவத் துறை மிகச் சிறப்பான துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. COVIDஐ சமாளிப்பதாக இருந்தாலும் சரி, மருத்துவத் துறையில், மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. 36 அரசு மருத்துவக் கல்லூரிகள், 48 தனியார் மருத்துவக் கல்லூரிகள் என்று அதிக மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட ஒரு மாநிலம் தமிழகம். இந்தியாவிலேயே இன்றைக்கு அதிகளவு மருத்துவ வசதி கிடைக்கிறது என்றால், அது தமிழ்நாட்டு மக்களுக்குத்தான். இன்றைக்கு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில்கூட ஒருவருக்கு உடல்நிலை சரியில்லையென்றால், அவர்கள் டாக்டரை பார்க்க வேண்டுமானால் அதற்கு அவர்கள் ஒரு மாதம் time எடுத்துக்கொள்கிறார்கள். சிகிச்சைக்கான அனைத்து செலவினத் தொகைகளையும் insurance மூலமாகத்தான் கட்டுகிறார்கள். ஆனால், இங்கே உடனடியாக டாக்டர்களைப் பார்க்கக்கூடிய வகையில், கிராமங்கள்தோறும், ஊர்தோறும் இன்றைக்கு மருத்துவ சதி கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மோடி அவர்கள் உத்தரபிரதேசத்தில் 20 மருத்துவக் கல்லூரிகளையும், குஜராத் மாநிலத்தில் 15 மருத்துவக் கல்லூரிகளையும் கொடுத்தார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று அறிவித்ததால், தமிழகம் இன்றைக்கு அதிக மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டிருக்கிற மாநிலமாக உயர்ந்திருக்கிறது. அதற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை யில்கூட தமிழ்நாட்டில்தான் அதிகமாக உடல் உறுப்புகளை நன்கொடையாக கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதிலேயும் நாம்தான் முதலிடத்தில் இருக்கிறோம். தொற்றா நோய்களைத் தடுக்கின்ற வகையில் நாம்தான் முதலிடத்திலே இருக்கிறோம். அப்படி எந்த வகையில் எடுத்துக்கொண்டாலும், நம்முடைய மருத்துவத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு, நம்முடைய மருத்துவத் துறையை அந்தத் துறையினுடைய அலுவலர்களை வைத்து நல்ல முறையில் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மருத்துவத் துறையில், எங்களுடையதிருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள இதய நோய் சிகிச்சை பிரிவுக்கு Cath lab ஒன்று வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். கண்டிப்பாக, அந்த Cath labஐ திருவண்ணா மலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்க வேண்டுமென்பதை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரியில் புற்றுநோய்க்காக கதிர்வீச்சு கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, அதற்குத் தேவை யான கருவிகளெல்லாம் பொருத்தப்பட்டுவிட்டன. ஆனால், இரண்டாண்டுகளாக அந்தத் துறைக்குத் தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் செயல்படாமல் இருக்கிறது. எனவே, அதைச் செயல்பட வைப்பதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கீழ்பெண்ணாத்தூர் தாலுகாவாக மாறிவிட்டது. எனவே, அங்குள்ள மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். உலக வங்கி நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ், அதற்கு சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடத்தைத் தர வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள் ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் NEET தேர்வு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த NEET தேர்வு எந்த அளவிற்கு தனியார் நிறுவ னங்கள்தான் Rajasthanல் உள்ள Kota என்ற இடத்திலே சென்று மாணவர்கள் எல்லாம் படிக்கக்கூடிய வகையிலே இந்த நிறுவன ங்கள் தான்இன்றைக்கு கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, NEET தேர்வு என்பது ஏழை, எளிய மக்களுக்கு விரோதமான ஒன்று, அதை நம்முடைய முதல்வர்தான் முதன்முத லாக NEETக்கு எதிராக தமிழகம்தான் குரல்கொ டுத்தது. இன்றைக்கு இந்தியாவிலே பல மாநிலங்கள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, NEET தேர்வை ஒழிக்கவேண்டும். அதை இந்தத் தீர்மானத்தின் மூலமாக NEET தேர்வு ஒழிக்கப்படவேண்டும் என்பதை நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவத் துறை திட்டங்களிலே இன்றைக்கு நிறையபேர் kidney இல்லாமல் dialysis செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே kidney transplantக்கு அதிகளவில் அதற்கு அனுமதி அளித்து, விரைவில் அவர்களுக்கு kidney transplant செய்வதற்கும், நுரையீரல் மாற்று சிகிச்சை செய்யக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

அதேபோல, உறுப்பு தானங்களை வழங்கக்கூடியவர்களுக்கு, உறுப்பு தானங்களை வழங்கக்கூடிய அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, இந்தியாவிலே தமிழ்நாடு தான் முதலி டத்தில் இருக்கிறது. அதை இன்னும் முதலிடத்தில்வருகின்றவகையிலே அதைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல் சிறு, குறு தொழில்களில் இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாடு தான் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. ஆகவே, இந்த முதன்மை மாநிலமாக விளங்கக்கூடிய மாநிலத்தில் இன்னும் சிறு, குறு தொழில்கள் வளர வேண்டுமானால், அவர்களுக்குக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும். ஏனென்றால், பெரிய பெரிய தொழில்களுக்கெல்லாம் பாரதீய ஜனநாயக அரசாங்கம் பல லட்சக்கணக்கான, கோடிகளில் மத்திய அரசாங்கம் தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால், சிறு, குறு தொழில்களுக்கு அப்படிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே, சிறு, குறு தொழில்களை அமைப்பதற்கு அவர்களுக்கான அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**இந்தியாவிலேயே முதல் மாநிலம்**

இன்றைக்கு இந்தியாவிலே முதல் மாநிலமாக தமிழகம் உயர்ந்திருக்கிறது. சிறு, குறு தொழில்களில் இரண்டாவது மாநிலமாக நாம் அதிகளவிலே GSTயை எல்லாம் கொடுக்கக்கூடிய ஒரு மாநிலமாக நாம் விளங்கிக் கொண்டிருக்கின்றோம் என்றால் அது சிறு, குறு தொழில் நிறுவனங்கள்தான். ஆகவே, அதற்கான இடங்களை எல்லாம் உடனுக்குடன் அந்தத் தொழில் அதிபர்களுக்கு வழங்கி, அந்தத் தொழில்களுக்குத் தேவையான அத்தனைத் திட்டங்களையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், தகவல் தொழில் நுட்பத் துறையில் நிறைய திட்டங்கள் நடைபெறுகின்றன. நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும்போதுதான், முதன்முதலாக TIDEL Park கொண்டு வந்தார்கள். அதன்மூலம், தமிழ்நாடு இன்றைக்கு அதிகளவு electronic பொருட்கள் ஏற்றுமதியிலே முன்னணி மாநிலமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் Hyderabad, Bangaloreஐ பின்னுக்குத் தள்ளி நாம் முன்னே வரவேண்டுமென்று இப்போது Airport எல்லாம் வழங்கியிருக்கிறார்கள்.

**சிங்கம்-கொசு கதை**

ஆகவே, அதையும் நம்முடைய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, இன்றைக்கு 6 இலட்சத்து 67 ஆயிரம் கோடியில் 27 இலட்சம் பேருக்கு தொழில் துறையில் முதலீட்டைக் கவர்ந்து வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளில் சென்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த முதலீடுகளை இன்னும் அதிகளவில் கவர்ந்து நிறைய தொழில் துறையை உருவாக்கவேண்டும். யார் யார் எந்த இடத்தில் நிலத்தை கொடுக்கிறார்களோ, அங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும். ஏனென்றால் இடம் கொடுக்காதவர்களுக்கு எல்லாம் தொழில் கொடுக்க மாட்டோம் என்று போராட்டம் நடத்தக்கூடாது.

தொழிலுக்கு இடம் கொடுத்தவர்களுக்கு அங்கு வேலைவாய்ப்பு அளித்து தொழில் துறையிலே நம்முடைய மாநிலம் முதல் மாநிலமாக வருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அதிகளவில் இன்றைக்கு இந்தியாவிலேயே பெரிய தொழில்கள் நம் மாநிலத்தை நோக்கி வருகிறது. தொழில் அதிகமான மாநிலம்; ஆகவே, அதை நினைத்து நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

காட்டில் சிங்கம் வேடம் போட்ட விலங்கு ஒன்று, தனிக்காட்டு ராஜாவாக வாழ்ந்து வந்தது. அது தனக்கு அபார வலிமை இருப்பதாக நினைத்து, தற்பெருமை கொண்டு காடெல்லாம் சுற்றி வலம் வந்து, அங்கிருந்த சிறு விலங்குகளை எல்லாம் அஞ்சி நடுங்க வைத்துக்கொண்டிருந்தது. இறைவா எதற்கும் அஞ்சி நடுங்கும் சின்னச்சிறு விலங்கா கவோ, கொசுவா கவோ என்னைப் படைக்காமல் எல்லா விலங்குகளும், பறவைகளும் என்னைப் பார்த்து அஞ்சி நடுங்கும் சிங்கமாக படைத்தாய் உனக்கு நன்றி என உரைத்த குரலில் காடெல்லாம் எதிரொலிக்கும் வண்ணம் பேசியது. இதைக்கேட்ட கொசுக்கள் சிங்கமே கொசுக்களாகிய நாங்கள் உன்னைவிட வலிமையானவர்கள், இதை அறிந்து அடக்கமாகப் பேசு என்றது.

இதைக் கேட்ட சிங்கம் "அற்ப கொசுவே யாரிடம் என்ன பேச்சு பேசுகிறாய், நான் நினைத்தால் ஒரே அடியில் 400 கொசுக்களை பிடித்து விடுவேன். உன் கூட்டத்தையே அழித்து விடுவேன்" என இறுமாந்தது. அதற்கு "சிங்கமோ நம்மில் யார் வலிமையானவர்கள் என்பதை சண்டை போட்டு முடிவு செய்யலாம் என்று சொன்னது. நீங்கள் 'என்னிடம் சண்டைக்கு வருகின்றீர்களா, வாருங்கள் நொடியில் உங்களை வீழ்த்துகிறேன்' என்று கர்ஜித்து கொசு வேகமாக பறந்து சென்று சிங்கத்தின் முகத்தில் கடித்தது."

உடனே சிங்கம் தன் முன்னங்காலால் முகத்தில் வேகமாக அறைந்தது, கொசு தப்பித்து சிங்கத்தின் உடலில் வட பக்கம், இட பக்கம், பின்பக்கம் என எல்லா இடங்களிலும் கடித்தது. நிதானம் இழந்த சிங்கம் கோவம் கொண்டு புலம்பியபடி கடித்த இடங்களிலெல்லாம் காலால் அறைந்தது. இதனால், சிங்கத்தின் உடலெல்லாம் காயம் ஏற்பட்டு வேடம் கலைந்து சோர்வடைந்து படுத்தது. அருகில் வந்த கொசு, இனி நான்தான் பெரியவன் என்று எண்ணி, யாரையும் எளியவர் என்று கேலி செய்யாதே என்று புத்தி புகட்டியது. இதைத்தான்;

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து.

என அய்யன் வள்ளுவர் சொல்லியிருக்கின்றார் என்றது.

இதற்கும் இன்றைய அரசியல் நடப்பிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆகவே, இப்படி 400 கொசுக்களில் ஒரு சிங்கம் சாய்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது இந்த நாட்டிலே நடைபெற்றிருக்கிறது என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றிகூறிவிடைபெறுகிறேன்.

இவ்வாறு பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசினார்.